துணை மேயர் மு.மகேஷ்குமார் வார்டு மேம்பாட்டு நிதியில்

# 169-வது வார்டில் நூலகம் -பல்நோக்கு கட்டிடம் - விளையாட்டு மைதானம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்! இரா.துரைராஜ் பங்கேற்பு!

சென்னை, ஏப். 3 -

அடையாறு மண்டலம் சைதை கிழக்குப் பகுதி 169-வது வார்டில் துணை மேயர் மு.மகேஷ்குமார் வார்டு மேம்பாட்டு நிதியில் படிப்பகம் - நூலகத்துடன் கூடிய பல்நோக்குக் கட்டிடத்தையும், விளையாட்டு மைதானத்தையும் அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று மாலை திறந்து வைத்தார்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் - துணை மேயர் மு.மகேஷ்குமாரின் 169- வது வார்டு மேம்பாட்டு நிதி ரூபாய். 24 இலட்சம் மதிப்பீட்டில் வெங்கடாபுரத்தில் பல்நோக்கு கட்டடம் (படிப்பகத்துடன் கூடிய நூலகம்) திறப்பு விழா மற்றும் மேயரின் அறிவிப்பின்படி மூலதன நிதியிலும், துணை மேயர் மு.மகேஷ்குமாரின் வார்டு



அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு 169, சைதாப்பேட்டை, தாலுகா அலுவலக சாலையில் மூலதன நிதி மற்றும் துணை மேயர் மு. மகேஷ்குமார் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.19.34 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கைப்பந்து மைதானம் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மண்டலக்குழுத் தலைவர்கள் ஆர்.துரைராஜ் (அடையாறு), எம்.கிருஷ்ணமூர்த்தி (கோடம்பாக்கம்), வட்டச் செயலாளர் எல். ஆரோக்கியராஜ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேம்பாட்டு நிதியிலும் ரூபாய். 19.34 இலட்சம் மதிப்பீட்டில் தாலுகா அலுவலக சாலையில் கைப்பந்து மைதானம் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் திறப்பு விழா நேற்று (2-04-2025 ) மாலை வெங்கடாபுரத்தில் துணை மேயர் மு.மகேஷ்குமார் தலைமையில் மாவட்டக் கழகச் செயலாரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பகுதிச் செயலாளர்கள் - மண்டலக் குழுத் தலைவர்கள இரா. துரைராஜ் எம். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டக் கழகச் செயலாளர் எல். ஆரோக்கியராஜ் அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்வில் சென்னை தெற்கு மாவட்ட அவை தலைவர் சைதை எஸ் குணசேகரன், மின்னல் கந்தப்பன், பகுதி துணை செயலாளர் மூ. ஆரோக்கியம், மாவட்ட பிரதிநிதி இரா. சுதாபிரியன், வட்ட கழக நிர்வாகிகள் அ. ஆரி, தமிழ்வாணன், துரை சரவணன், சைதை விக்டர், மு.சந்திரா,

மை. அருள்ராஜ், வி. என். செல்வமணி, சூரியன் பிரபு, அ.ஆனந்தராஜ், ஆ பரணி, மற்றும் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணியினர், மகளிர் அணியினர், கழக முன்னோடிகள் , பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 42 வது நாள்!

## துறைமுகம் கிழக்கு – மேற்குப் பகுதிகளில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஏப். 3 -

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 42 ஆம் நாளான - கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளில் நேற்று (02.4.2025) துறைமுகம் கிழக்கு பகுதி 1) வட்டம் 55 ஆ அம்மன் கோயில் தெரு கோவிந்தப்பன்



நாயக்கன் தெரு, சென்னை. 2) துறைமுகம் மேற்கு பகுதி வட்டம் 54 அ பி.கே.ஜி கார்டன் 4வது சந்து அண்ணா பிள்ளை தெரு, ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமா ட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், பி. ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம். விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்கு மார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி. ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே. பா.பிரபாகரன்

ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி. விஜயகுமார், ம.அசோக்கு மார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! பி.கே.ஆதவன்மணி தலைமை!

# மனிதய நேயம் 39: கொளத்தூர் கிழக்கில் மாபெரும் புகழரங்கம்!

## கு.பிச்சாண்டி - நடிகர்கள் யோகிபாபு - கிங்ஸ்லி சிறப்புரை!

சென்னை, ஏப். 3 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின்மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் -39பொன்னுலகம் படைக்கும் புரட்சியாளர்! பூபாளம் இசைக்கும் பண்பாளர்!!எனும் தலைப்பில் கொளத்தூர் கிழக்கு பகுதியில் மாபெரும் புகழரங்கம் இன்று (3.04.2025 வியாழக்கிழமை) மாலை 6.00 மணியளவில், பெரியார் நகர் பள்ளி மைதானத்தில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் 68வது வட்ட கழக செயலாளர் கே.பி.ஆதவன்மணி தலைமை வகிக்கிறார். மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே. சேகர்பாபு, பகுதிச் செயலாளர் கள் ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராசன் மற்றும் கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சரிதாமகேஷ்குமார் எம்.சி, வானவில் விஜய், தேவஜவஹர், எஸ்.பன்னீர்செல்வம், எஸ்.தனசேக், துரை கண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக்முன்னிலை வகிக்கிறார்.

பி.பழனி, இள.இளங்கோவன், எம்.தாவூத்பீ, எஸ். கே.ரமேஷ், எல்.டி.தாமஸ், பி.டி.சிரவி, பா.அன்பரசு, ந.பொன்முடி, டி.சந்திரசேகர், பி.ஊமைதுரை, கே.ஜார்ஜ்குமார், பி.அமுதா, சி.ஸ்ரீதணி, டி.யோகபிரியா, கே.சாரதா ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில், துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, நடிகர்கள் யோகிபாபு, கிங்ஸ்லி, தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளர்கவிஞர். சிவநந்தினி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும், மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம்கவி, அ.வெற்றிஅழகன், ஜோசப்சாமுவேல் மற்றும் ப.ரங்கநாதன், இரா.விடுதலை, கே.பலராமன், கே.ரமேஷ், எஸ்.பாலமுருகன், ஆர்.அற்புதமேரி, ஜே.பாலாஜி, டி.சிவநேசன், ஜே.ஜே.பிரான்சிஸ், எ.தட்சணமூர்த்தி, என்.தனசேகர் (எ) குட்டி, டி.ஜீவானந்தம், என்.வெங்கடேஷ்பாபு, ஆர். சண்முகம், கே.வி.ராமச்சந்திரன், விஜயகுமார், மெர்ஸி சண்முகம், மீனா, சசிகலா, செந்தில், வெங்கடேசன், நிவசார்அலி, கண்ணையன், குமரவேல், பிரவீன், பூபதி, செந்தில்குமார், பொன்.புகழேந்தி, எஸ்.விஜயன்குமார் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக துணை செயலாளர் கே.ரமேஷ் நன்றி கூறுகிறார்.

எஸ். ஸ்டாலின் ஏற்பாடு! ஏ.வி.ஆர். ஆறுமுகம் தலைமை! திருவொற்றியூர் மத்திய பகுதி

# இளைஞரணி சார்பில் அண்ணா சிலைக்கு மாலை - அறுசுவை உணவு!

## ஆர்.டி. மதன்குமார் – கேபிள் கணேசன் – கரிகால சோழன் – சாலை கணேசன் பங்கேற்பு!

சென்னை,ஏப்.3-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞரணி சார்பில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் அறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் தமிழக முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞரணி அமைப்பாளர் எஸ். ஸ்டாலின் ஏற்பாட்டில், பகுதிச் செயலாளர் ஏ.வி.ஆர். ஆறுமுகம் தலைமையில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவெற்றியூர் ஆர்.டி. மதன்குமார், துணை அமைப்பாளர்கள் கேபிள் தா.வேல் கணேசன், டி. ஜி.ஆர். மனிவண்ணன், பகுதி கழக நிர்வாகிகள் ஆர்.டி.ரமேஷ்குமார், எம். எஸ். நாகலிங்கம், வட்ட கழக செயலாளர்கள் தச. கரிகால சோழன், சாலை கணேசன், மாவட்ட பிரதிநிதிகள் விஜயரங்கன், கிருஷ்ணமூர்த்தி, திருவெற்றியூர் மத்திய பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பா.மகேந்திரன், ர.லோகேஷ் பிரபு, எம். டி.மோகன். கு.சுரேஷ், செ.விக்னேஷ், ச.மணிகண்டன், த.சதீஷ்குமார், வட்ட கழக நிர்வாகிகள் கோ.ராமமூர்த்தி, குலசேகரன், தயாளன், சுந்தர், கலை சரவணன், பலராமன், ஆனந்தி, ஏவி.மகேந்திரன், மனோகரன், பகுதி மகளிர் அணி அமைப்பாளர் ஜெயா, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சுமித்ரா, மாணவர் அணி துணை அமைப்பாளர் வசந்த் ராஜ், இளைஞர் அணி அமைப்பாளர்கள் புழல் சே.யுவராஜ், ீசரவணன், பி.ஜி. அவினாஷ், துணை அமைப்பாளர்கள் தே.ஞானசேகர், வி.யோகராஜ்(எ)மணிகண்டன், ச.சதிஸ், சி.ஜெயபிரகாஷ், தே.சதிஸ்குமார், எம்.எஸ்.மணிகண்டன், கே.டி.ஆர்.பாலமுருகன், ம.கார்த்திக், சு.கார்த்திக்ராஜா, ஆர்.எம். மணிகண்டன், அ.ஹரிபிரசாத், கே.பி.எஸ்.ரஞ்சித்குமார், கே.மோகன்ராஜ், அ.டேவிட்(எ)நாவலன், ர.ஐய்யப்பன், ம.குரலரசன், அ.மணிமாறன், மாதவரம் புகழரசு,கிளை செயலாளர் தினேஷ், ஆமுல்லைவாயல் சேகர், ஆர்.கே.ரமேஷ், வெள்ளை செல்வம், சந்திரன், ஐம்புலிங்கம், எஸ். பழனி, சாலை சுரேஷ், சுகுமாரன், மாரியப்பன், சந்திரகாந்தன், சேகர், பாலாஜி, ஜோதிபாசு, மூர்த்தி, கார்த்திக், மகேஷ், சர்மா, ஆட்டோ பாஸ்கர், ஜோசப், மதன், ஹரி, நந்தகுமார், ஆதித்யா, மாஸ்டர் வில்சன், ஜ ிட், கிரி, பிரதீப், ஜாபர், நவீன், பலூன் சுரேஷ், ரகுநாத், ரிச்சர்ட், சோழவரம் சீ.ஹரிஷ், ஜீ.ஹரி, கே.விக்கி மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்துகொண்டனர்.



பச்சையப்பன் கல்லூரி நிறுவனர் கல்வி வள்ளல் பச்சையப்பர் அவர்களின் 231ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு பச்சையப்பன் கல்லூரி மாணவர் திமுக முன்னாள் செயலாளர் மு.ப. சரவணன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் வள்ளல் பச்சையப்பர் சிலைக்கு கழக சட்ட திட்ட திருத்த குழு செயலாளர் இரா.கிரிராஜன் எம். பி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் பல்வேறு துறைகளில் பணியாற்றும் பணியாற்றிய கல்லூரி முன்னாள் மாணவர்கள் பெருமளவில் திரண்டு வள்ளல் பச்சையப்பர் அவர்களுக்கு மலர் தூவி புகழ் வணக்கம் செலுத்தினர்.



காஞ்சிபுரம் வடக்குமாவட்டம் திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட பென்னலூர் ஊராட்சியில் PCC கிரிக்கெட் குழு செயல்பட்டு வருகிறது இக்குழுவில் உள்ள விளையாட்டு வீரர்கள் பென்னலூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கோ.சி.பாபுவிடம் கேட்டுக் கொண்டதன் பேரில் 30 ஆயிரம் மதிப்பிலான ஹபீக்கோ ஸ்போட்ஸ் கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது இவ் விளையாட்டு உபகரணங்களை சிவாஜி கிருஷ்ணமூர்த்தி வழங்கிட PCC கிரிக்கெட் குழு சார்பாக எ.வினோத், கோ.கோட்டி. ர.தீபக் ஆகியோர் பெற்றுக் கொண்டனர் மற்றும் தோழர்T.ஜெய்சங்கர், லோகேஷ், ஓ.முத்து ஆகியோர் உடன் இருந்தனர்.

# ஆதிக்க மொழிமுகத்தை அசைத்திருக்கிறது தமிழ்நாடு!

## ‘கணையாழி’ தலையங்கம்!

ஆட்சிமொழி அதிகாரத்தில்
முகம் இழந்த மொழிக்காரர்கள்
தமிழ்நாடு முதலமைச்சரின்
முன்னெடுப்பில்
விழித்துக்கொண்டு வருகிறார்கள்!

மொழிகளின் முகத்தை
வளர்த்தெடுக்கிறார்கள் படைப்பாளர்கள்!
வரலாற்றுக் காலந்தொட்டு
மக்களின் அறிவு முகத்தை
மாற்றிக்கொண்டு வருகின்றன.
மொழிகள்!

மறைந்து கிடக்கும் மனதை
வெளிப்படுத்த வந்த
மொழிகளைக் கொண்டே
மனதை மறைக்கிறார்கள்!

நடந்ததைச் சொல்ல வந்த மொழிக்கு
நடக்காததைச் சொல்லக் கற்றுத்
தருகிறார்கள்.
இருப்பதைச் சொல்லவந்த மொழியை
இல்லாததைக் கற்பிக்கப்
பழக்கப்படுத்துகிறார்கள்!
காலப் பெட்டகத்தின் கருத்துக் கருவூலத்
திறவுகோல் மொழிகளை
ஆட்சிமொழி இந்திதான் என்று
அதிகாரச் சிறையில் அடைக்கப்
பார்க்கிறார்கள்!

சேர்ந்து வாழக் கண்டடைந்த
மொழியில் உயர்வு தாழ்வு பேசி
பிரிவினை செய்கிறார்கள்!

முன்பே சீராக இல்லாத ஒன்றை
மறுசீரமைக்க மல்லுக்கட்டுகிறார்கள்!
ஜனநாயகம் என்பது அனைவருக்கும்
சம உரிமை மட்டுமில்லை
மாநிலங்களுக்கும் சம உரிமை! ]

ஒரு நாடு என்பது
ஒரு மொழி வழங்கும்
பகுதி மட்டும் என்பது இல்லை!
ஒரே மொழி பேசும் நாடுகள்
ஒரே நாடாக இல்லை.

ஒரு நாடு என்பது பரப்பளவால்
தீர்மானிக்கப்படுவதில்லை!
ஏனெனில் நாடுகளின் எல்லைகள்
ஆயுதங்களின் கைகளில்!
ஒரு நாடு என்பது
ஒரே மத நம்பிக்கையில் இல்லை!
ஏனெனில்
ஒரே மதத்தைப் பின்பற்றுகின்ற
பாகிஸ்தானும் வங்காள தேசமும்
வெவ்வேறு நாடுகள்!

இந்தியா, ஆங்கிலேயர் காலத்தில்
மூன்று மாகாணங்கள்!
விடுதலை இந்தியா –
மாநிலங்களின் ஒன்றியம்!
அப்படியானால்
மாநிலங்களை எப்படிப் பிரித்தார்கள்?
பரப்பளவு கொண்டா?
மத நம்பிக்கை கொண்டா?
மக்கள் தொகை கொண்டா?

மக்கள் தொகைக்கு ஏற்பப் பிரித்திருந்தால்
நாடாளுமன்ற உறுப்பினர்கள்
எண்ணிக்கையைப் போல
மாநிலங்களின் எண்ணிக்கையையும்
மறுசீரமைப்பு செய்ய வேண்டுமே!
அதற்குப் பதிலாக
மாநிலங்களை மறுசீரமைப்பு செய்யாமல்
மாநிலங்களின்
நாடாளுமன்றத் தொகுதிகளின்
எண்ணிக்கையை
மறு வரையறை செய்கிறார்கள்!

நாடாளுமன்ற உறுப்பினர்களின்
எண்ணிக்கைக் கணக்குதான்
இந்தியாவின் தலையெழுத்தைத்
தீர்மானிக்கும் என்பதால்
அதிக எண்ணிக்கை கொண்ட
மாநிலங்களுக்கே அதிக அதிகாரம்!
அதிக அதிகாரம், மற்றவர்களை
அடக்கி வைக்கத் தூண்டாதா?

இந்தியாவை மொழிவழி மாநிலங்களாகச்
சீரமைத்துவிட்டு,
மாநில ஆட்சிமொழியைத் தீர்மானிக்கும்
அதிகாரத்தையும் தந்துவிட்டு
மக்கள் தொகை கணக்கில்
மொழிகளின் உரிமைகளா?

ஆகவே, இந்தியா –
மாநிலங்களின் ஒன்றியம் என்பதை
உறுதி செய்யவும்
எல்லா மாநிலங்களுக்கும்
சமமான உரிமை என்பதை
நடைமுறைப்படுத்தவும்
மக்கள் தொகை, பரப்பளவு,
மத நம்பிக்கைகளைப் பார்க்காமல்
எல்லா மாநிலங்களுக்கும்
நாடாளுமன்றத்தில்
ஒரே அளவிலான வாக்குரிமைக்கு
அரசியல் அமைப்புச் சட்டத்தில்
வழிகாண வேண்டாமா?

“மொழிவழி பிரித்தாலும்
எண்ணம் ஈடேறாது” என்றும்
ஆட்சி மொழித்துறையில்
இந்திய மொழிகள் பிரிவைப்
பிரதமர் மோடி
உருவாக்கியிருப்பதாகவும்
சொல்லியிருப்பதோடு
இந்தி மொழி எந்த மொழிக்கும்
போட்டி இல்லை என்றும்
இந்திய மொழிகளோடு அது
இணக்கமான மொழி என்றும்
இந்திய மொழிகள் வளம்பெற
உதவியதோடு இந்திய மொழிகளால்
வளம்பெற்ற மொழி என்றும்
இந்திக்குப் பாமாலை பாடியிருக்கிறார்
ஒன்றிய அமைச்சர் அமித்ஷா!
ஆனால் இந்திய ஒற்றுமைக்கு
ஆட்சிமொழி இந்திதான் சிக்கல் என்பது
இப்போதுதான் தெரிய வந்திருக்கிறது
ஒன்றிய அரசுக்கு!
“வரும் டிசம்பர் முதல்
பொது மக்களோடும்
முதலமைச்சர்களோடும்
நாடாளுமன்ற உறுப்பினர்களோடும்
அவரவர் தாய்மொழியில் எழுத்து
வழியாகவே
தொடர்புகொள்ளப் போவதாக’’
உள்துறை அமைச்சர் அமித்ஷா
உறுதி அளித்திருக்கிறார்!

மாநிலங்கள் அவையில்!
ஆம்!
அவரவர் தாய்மொழியில்
ஒன்றிய அரசோடும் மக்கள்
உரையாட வேண்டியே
போராடி வருகிறது தமிழ்நாடு!

அவரவர் தாய்மொழியில்
அரசின் நடவடிக்கை என்றால்
இந்தியைப் போல
அட்டவணை மொழிகள் அனைத்துமே
ஆட்சிமொழிகள் தாமே!
இந்தியும் ஆட்சி மொழி என்ற
அதிகாரம் இழந்து
மற்ற மொழிகளைப்போல
அலுவல் மொழி ஆகட்டும்!
அதற்கு வழிகாட்ட மும்மொழிக் கொள்கை
முகமூடியைக் கிழித்து
இந்தித் திணிப்பை இனம் காட்டி
எதிர்த்து நிற்கிறார் தமிழ்நாடு முதல்வர்!
அதனால் இப்போது
முகம் மாறி வருகிறது
ஒன்றிய அரசு!
ஆம்!
ஒன்றிய அரசின்
ஆதிக்க மொழிமுகத்தை
அசைத்திருக்கிறது தமிழ் நாடு!



ம.ரா.

–நன்றி
கணையாழி!
ஏப்ரல் – 2025